[1978 ஆகஸ்ட் 31

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அவைகளையெல்லாம் ரெவின்யூ வில்லேஜுகளாக மாற்றவேண்டுமென்று நீண்ட நெடுங் காலமாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கேட்டு கொண்டி ருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அவர்கள் குடியிருக்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து அவர்கள் எந்தவிதக் கடனும் பெறமுடி யாது. சர்க்காருக்கு அவர்கள் எந்தவிதமான வட்டியும் கட்டு வது கிடையாது. ஆனால் தலைமுறை தலைமுறையாக அவர்கள் அங்கே இருந்து வருகிறார்கள். அந்தக் கிராமங்களை ரெவின்யூ கிராமங்களாக மாற்ற வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிற தரு ணத்திலேதான் ஆட்சி கலைக்கப்பட்டது. இப்போது இந்த அரசு அதைச் செய்வதிலே ஆட்சேபணையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் எப்போது தரப்படும்? அந்தத் தேதியை அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நீண்ட நெடுங் காலம் என்பதைக் குறித்துச் சொல்ல வேண்டியதில்லை, அது எவ்வளவு காலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களே அறி வார்கள். இந்தியத் துணைக் கண்டம் விடுதலைப் பெற்ற பிறகு ஒரு ஆட்சி இருந்தது. அதற்குப் பிறகு ஒரு ஆட்சி இருந்தது, அதற்குப் பிறகு 6 ஆண்டுக்காலம் ஒரு ஆட்சி இருந்தது, அப் போது காத்திருந்தார்கள். அந்த 6 ஆண்டுக்கால ஆட்சியி லும் காத்திருந்தார்கள், இப்போது 6 ஆண்டுக்காலம் காத்தி ருக்க வேண்டாம், சிறிது காலம் காத்திருந்தால் போதும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாத்தனூர் அணைப்பகுதியில் நெல் கொள்முதல்.

* வின 6—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவண்ணாமலை ஒன்றியத்தைச் சேர்ந்த சாத்தனூர் அணை நீர்ப்பாசன பகுதிகளில் முதல் ரக விதைகள் பெற்ற விவ சாயிகளிடமிருந்து மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுவ தால் அரசு நிர்ணயித்துள்ள விலை விவசாயிக்கு கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. உராா. எட்மண்ட்: (அ) வேளாண்மைத் துறையிலிருந்து, விதைநெல் பெற்ற விவசாயிகளிடமிருந்து, விதைக்காக நெல் அந்தத் துறையால் வாங்கப்படுகிறது. வெளிச் சந்தையில் நிலவும் விலைகளுக்கு மேலாக 10 முதல் 15 சத விகிதம், சுத்தம் செய்தல், காயவைத்தல் முதலிய செலவுகளை ஈடு செய்ய, கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது.

1978 ஆகஸ்ட் 31]

தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் எந்த விவசாயி நெல் அளித்தாலும் அதை மோட்டா ரகத்திற்கு குவிண்டால் ரூ. 90 விலையிலும் நடுத்தரம் ரூ. 95-க்கும் 1-2-1978 முதல், நேரடிக் கொள்முதல் நிலையங்களில் வாங்கி வந்தது. 15-7-1978 முதல் நெல்வரத்து நின்று விட்டதால் நிலையங்கள் மூடப்பட்டன. முதல் ரக நெல் விதைகள் பெற்ற விவசாயிகளிடம் மட்டும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல் வாங்கியது என்பது சரியல்ல.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, 1-6-1978 முதல் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட விற்பனைக் கூடங்களில் நெல் வாங்கப்படுகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, தரமான விதை நெல் வைத்திருக்கும் எல்லா விவசாயிகளிடமிருந்தும் நெல்லை வாங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இப்போது அரசிடம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குறுவை அறுவடை துவங்கப்பட்டு எல்லா இடங்களிலும் நடந்து வருகிறது. இந்த நேரத்தில் விவசாயிகளிடமிருந்து நியாய விலையில் நெல் கொள்முதல் செய்வதற்கு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் மூலமாக கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அரசுக்குத் தெரிந்த வரையில் இன்னும் குறுவை அறுவடை ஆரம்பமாகவில்லை.

## கோவை புதூரில் முன்னாள் இராணுவத்தினர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள்.

* வினா 7—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோவை மாவட்ட முன்னாள் இராணுவத்தினர் நன்நலச் சங்கம் (பதிவு எண் 55/67) 25-1-1978 அன்று கோவை புதூரில் உள்ள முன்னாள் இராணுவத்தினர் புனர்வாழ்வு புனரமைப்பு சிறப்பு நிதியிலிருந்து கட்டப்பட்ட வீடுகளுக்கு வசூலிக்கும் வட்டியை ரத்து செய்யக் கோரி மனு அனுப்பினார்களா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த முடிவு யாது ?